செ.வெ.எண்: 576 நாள்: 08.10.2021

# புதுக்கோட்டை மாவட்டத்தில் 10.10.2021 ஞாயிற்றுக்கிழமையன்று 5 வது கோவிட் -19 மாபெரும் தடுப்பூசி முகாம் 735 இடங்களில் நடைபெறவுள்ளது.

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் 10.10.2021 அன்று நடைபெறவுள்ள கோவிட் -19 மாபெரும் தடுப்பூசி முகாம் தொடர்பாக செய்தியாளர் சந்திப்புக் கூட்டம் மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (08.10.2021) நடைபெற்றது.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது;

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின்படி, புதுக்கோட்டை மாவட்டத்தில் 10.10.2021 ஞாயிற்றுக்கிழமையன்று 5 வது கோவிட் -19 மாபெரும் தடுப்பூசி முகாம் நடைபெறவுள்ளது. இம்முகாமிற்காக புதுக்கோட்டை மாவட்டத்திற்கு 1.11 லட்சம் டோஸ் கோவிட் -19 தடுப்பூசி வரப்பெற்றுள்ளது.

மாவட்டம் முழுவதும் 735 இடங்களில் தடுப்பூசி முகாம் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கோவிட் முதல் தவணை தடுப்பூசி செலுத்தியவர்கள் 64 சதவீதம், இரண்டாம் தவணை தடுப்பூசி செலுத்தியவர்கள் 19 சதவீதம் பேர் ஆவார்கள். இரண்டாம் தவணை தடுப்பூசி செலுத்த வேண்டியவர்கள் 94,000 நபர்கள். இந்த இரண்டாம் தவணை தடுப்பூசி செலுத்த வேண்டியவர்களை ஞாயிறு அன்று நடைபெறும் முகாமில் தடுப்பூசி செலுத்த செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் இதுவரை 4 மாபெரும் தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டுள்ளது. இதில் பொதுமக்கள் கோவிட் தடுப்பூசி செலுத்தியதன் மூலம் கொரோனா பாதிப்பு 1 சதவீதத்திற்கு குறைவாக உள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் கோவிட் பாதிப்பு 0.9 சதவீதம் அளவாக உள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் போன்றவர்களுக்கு 100 சதவீதம் கோவிட் -19 தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. மேலும் 60 வயதிற்கு மேற்பட்டவர்களில் 92 சதவீத

நபர்களுக்கு கோவிட் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இவர்களுக்கு வருகின்ற 5 வது கோவிட் -19 மாபெரும் தடுப்பூசி முகாமில் 100 சதவீதம் கோவிட் தடுப்பூசி செலுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆயுதபூஜை, விஜயதசமி, தீபாவளி போன்ற பண்டிகை காலங்களில் பொதுமக்கள் அதிகம் கூடுவார்கள். எனவே கொரோனா தடுப்பு நெறிமுறைகளைப் பின்பற்றி அனைவரும் கோவிட்-19 தடுப்பூசி செலுத்திக்கொண்டு பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் மொத்தம் உள்ள 497 கிராம ஊராட்சிகளில் இதுவரை 134 ஊராட்சிகளில் 100 சதவீதம் செலுத்தப்பட்டுள்ளது. இதேபோன்று பிற ஊராட்சிகளிலும் 100 சதவீதம் கோவிட் தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

-----------------------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**